**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**நாள். 18.06.2025.**

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,</u>**
**<u>அசல் வழக்கு எண். 145/2019</u>**

2025-ம் ஆண்டு ஜுன் மாதம் 18ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | பூங்காவனம் | வயது | : | 44 |
| ஊர் | : | கீழ்மட்டை | தொழில் | : | கூலிவேலை |

**<u>பி.வா.சா.1 ( முருகன் ): பிரதிவாதி தரப்பில் முதல் சாட்சியின் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:</u>**

நான் இந்த வழக்கில் 9-ஆம் பிரதிவாதியாவேன். தாவா சொத்து பற்றி விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து ஆதியில் யாருக்கு சொந்தமானது என்றால் வெள்ளக்கண்ணு என்கிற நடேசன் மற்றும் மாசிலாமணி என்பவருக்கு சொந்தமானது. அவர்கள் இருவரும் அண்ணன் தம்பி என்றால் சரிதான். அவர்கள் இருவரும் உடன் பிறந்த சகோதரர் ஆவார்கள். தாவா சொத்தானது யார் கிரையம் பெற்றது என்றால் பூங்காவனம் கிரையம் பெற்றார். தாவா சொத்தானது 07.06.1967 தேதியில் நடேசன் என்பவர் கிரையம் பெற்றார் என்றால் இல்லை. நான் 6 வகுப்பு வரை படித்துள்ளேன். நடேசன் கிரையம் பெற்ற 07.06.1967 தேதியிட்ட கிரைய ஆவணத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். தாவா சொத்திற்கான பட்டவானது நடேசன் என்பவர் பெயரில் இருந்ததா என்றால் பூங்காவனம் என்பவர் பெயரில் தான் இருந்தது. தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 107/3 ஆகும். அந்த பட்டாவனது வெள்ளக்கண்ணு என்பவர் பெயரில் உள்ளது. அந்த பட்டாவனது 6 பிரிவுகளாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. எனக்கு பட்டா அளிக்கும்போது தான் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் 6 உட்பிரிவுகளில் 3 உட்பிரிவுகள் என் அப்பா பூங்காவனம் என்பவருக்கும், 1 உட்பிரிவு என் அண்ணன் பழனி பெயரிலும், என் அண்ணி கவிதா பெயரில் 1 உட்பிரிவு கொடுக்கப்பட்டுள்ளது.

5 ஆண்டுக்கு முன்னர் மேற்சொன்ன பட்டாக்கள் அரசாங்கத்தால் இலவசமாக எங்களுக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். இந்த தாவா சொத்து குறித்து இதற்கு முன்பாக அசல் வழக்கு எண். 276/2015 என்ற வழக்கு இதே நீதிமன்றத்தில் வாதியின் தகப்பனாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியின் தகப்பனார் முனுசாமி என்பவர் இறந்துவிட்டபடியால் அவரின் வாரிசுதாரர்கள் இந்த வழக்கின் வாதிகள் மேற்சொன்ன வழக்கில் வாரிசுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால் சரிதான். வாதிகள் இந்த வழக்கிலும் மேற்சொன்ன வழக்கிலும் பூங்காவனத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் என் அப்பாவான பூங்காவனம் இறந்துவிட்டபடியால் 2 முதல் 9 பிரதிவாதிகள் அவரின் வாரிசுதார்களாக இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 276/2015 என்ற வழக்கில் 100 சதுரமீட்டர் மட்டும் வாதிகளுக்கு சொந்தமானது என்று தீர்ப்பாகியுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த வழக்கில் வாதிகளுக்கு விளம்புகை பரிகாரம் மட்டும் வழங்கப்பட்டுள்ளது என்றும் சுவாதீனத்திற்கு எந்த பரிகாரமும் வழங்கப்படவில்லை என்பதால் வாதிகள் இந்த தாவாவை சுவாதீனம் பெறுவதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை.

**(குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பாரத்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

K NALEENI Digitally signed by K NALEENI Date: 2025.06.18 18:37:57 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
செய்யாறு